# தமிழர் கல்வி மேம்பாட்டுப் பேரவை
# TAMIL EDUCATION DEVELOPMENT COUNCIL

# தமிழ்மொழி

## பொதுத்தேர்வு

## 2021

## வளர் தமிழ் 9

சுட்டெண்: | | | | | | | | | |

நேரம்: 180 மணித்துளிகள்

மொத்தப்புள்ளிகள் : 100

www.tamiledc.com

## அலுவலகப் பயன்பாட்டுக்கு

| வினா எண் | புள்ளிகள் | 1ம் முறை | 2ம் முறை | இறுதிப் புள்ளிகள் |
|---|---|---|---|---|
| 1 | 30 | | | |
| 2 | 10 | | | |
| 3 | 10 | | | |
| 4 | 10 | | | |
| 5 | 15 | | | |
| 6 | 05 | | | |
| 7 | 20 | | | |
| மொத்தப் புள்ளிகள் | 100 | | | |

| | |
|---|---|
| 1ம் முறை - பெயர் / ஒப்பம் | |
| 2ம் முறை - பெயர் / ஒப்பம் | |

**1) தேர்விடை வினா - சரியான விடைக்குரிய கூட்டில் புள்ளடி இடுக.**

1. இடையின மெய்எழுத்துகள்

அ) க்,ச்,ட்,த்,ப்,ற் ☐ ஆ) க்,த்,ஞ்,ந்,ல்,ள் ☐

இ) ங்,ஞ்,ண்,ந்,ம்,ன் ☐ ஈ) ய்,ர்,ல்,வ்,ழ்,ள் ☐

2. தனிநாயகம் அடிகள் பிறந்த ஊர்

அ) கைதடி ☐ ஆ) கோப்பாய் ☐

இ) கரம்பொன் ☐ ஈ) நீர்வேலி ☐

3. மன்னன் சங்கிலியனின் உருவச்சிலை அமைந்துள்ள இடம்

அ) நல்லூர் ☐ ஆ) நாவற்குழி ☐

இ) கோப்பாய் ☐ ஈ) சுன்னாகம் ☐

4. கூரிருள் கழிந்தது. கோழிகள் கூவின. இங்கு கூர் என்ற சொல்

அ) பெயர்ச்சொல் ☐ ஆ) வினைச்சொல் ☐

இ) இடைச்சொல் ☐ ஈ) உரிச்சொல் ☐

5. எ,யா என்பன

அ) உயிர்எழுத்துகள் ☐ ஆ) மெய்எழுத்துகள் ☐

இ) உயிர்மெய்எழுத்துகள் ☐ ஈ) வினாஎழுத்துகள் ☐

6. தண்மை + நீர்

அ) தண்மைநீர் ☐ ஆ) தண்ணீர் ☐

இ) தன்னீர் ☐ ஈ) தண்நீர் ☐

7. துறைபோதல் என்பதன் பொருள்

அ) முற்றும் கற்றல் ☐ ஆ) வீட்டுக்குப்போதல் ☐

இ) கதியற்றவர் ☐ ஈ) மனஉணர்வு ☐

8. ஓர் எழுத்து புதிதாகத் தோன்றும் புணர்ச்சி

அ) கெடுதல்புணர்ச்சி ☐ ஆ) தோன்றல்புணர்ச்சி ☐

இ) திரிதற்புணர்ச்சி ☐ ஈ) இயல்புப்புணர்ச்சி ☐

9. தேன் மொழி என்ற உவமை அணியின் உவமானம்

அ) இனிமை ☐ ஆ) தேன் ☐

இ) மொழி ☐ ஈ) இல்லை ☐

10. இன உணர்வுள்ள மாபெரும் வீரன் ——— த் துணை போக மாட்டான்.

அ) மாற்றானுக்கு ☐ ஆ) நண்பனுக்கு ☐

இ) உறவினருக்கு ☐ ஈ) அயலவருக்கு ☐

11. நிறைகுடம் தளம்பாது என்ற பழமொழியின் கருத்து

அ) விடாப்பிடி ☐ ஆ) உயர்ந்தநட்பு ☐

இ) அறிவின்அடக்கம் ☐ ஈ) வீண்பெருமை ☐

12. மொழிஞாயிறு எனப்போற்றப்படுபவர்

அ) தேவநேயப்பாவாணர் ☐ ஆ) இளங்கோவடிகள் ☐

இ) திருவள்ளுவர் ☐ ஈ) பாவேந்தர் ☐

13. மாந்தன் கையாண்ட முதற்கருவி

அ) கல் ☐ ஆ) இரும்பு ☐

இ) செம்பு ☐ ஈ) தங்கம் ☐

14. சுவைட்சரை மிகவும் கவர்ந்த நூல்களில் ஒன்று

அ) மூதுரை ☐ ஆ) சிலப்பதிகாரம் ☐

இ) திருக்குறள் ☐ ஈ) நாலடியார் ☐

15. கார்மேகம் அன்ன கூந்தலாள் என்ற உவமை அணியின் உவமேயம்

அ) கார்மேகம் ☐ ஆ) அழகு ☐

இ) கூந்தல் ☐ ஈ) கருமை ☐

16. அலுமாரி என்ற சொல்

அ) இயற்சொல் ☐ ஆ) வடசொல் ☐

இ) திசைச்சொல் ☐ ஈ) திரிசொல் ☐

17. வீரமகன் மார்பில் வேல் தாங்கி இறந்தான். இதில் இடம்பெற்றுள்ள வேற்றுமை

அ) 4 ஆம் வேற்றுமை ☐ ஆ) 3 ஆம்வேற்றுமை ☐

இ) 2 ஆம்வேற்றுமை ☐ ஈ) 7 ஆம்வேற்றுமை ☐

18. உயிர்மெய்யெழுத்துகளில் ஒன்று

அ) ஈ ☐ ஆ) பை ☐

இ) க் ☐ ஈ) த் ☐

19. கொடுத்தனர் என்ற சொல்லின் விகுதி

அ) அர் ஆ) த்

இ) கொடு ஈ) ஆர்

20. பேழையுள் இருக்கும் பாம்பென உயிர்க்கும் ஏழையாளன்

அ) பாண்டியன் ஆ) மன்னன்

இ) புலவர் ஈ) காவலன்

21. பகாச்சொல்

அ) தீ ஆ)பொன்னன்

இ) வலைஞன் ஈ) செய்தான்

22. பின்வருவனவற்றுள் அடுக்குத்தொடர்

அ) உயரஉயர ஆ) பென்னம்பெரிய

இ) கலகல ஈ) கையும்மெய்யும்

23. களிறு என்பது

அ) ஆண்மாடு ஆ) பெண்மாடு

இ) பெண்யானை ஈ) ஆண்யானை

24. பெருந்தோட்டப் பயிர்களில் ஒன்று

அ) அரிசி ஆ) பயறு

இ) தேயிலை ஈ) உழுந்து

25. அ இ உ என்பன

அ) வினாவெழுத்து ஆ) சுட்டெழுத்து

இ) மெய்யெழுத்து ஈ) நெட்டெழுத்து

26. காலமழை காணாத மண்ணிலே பாறை பிளந்து பயன் விளைவிப்பவன்

அ) கலைஞன் ☐ ஆ) மீனவன் ☐
இ) உழவன் ☐ ஈ) காவலன் ☐

27. விகுதியையும் இடைநிலையையும் இணைக்கும் சொல்

அ) சாரியை ☐ ஆ) சந்தி ☐
இ) பகுதி ☐ ஈ) மாற்றம் ☐

28. வீரமகன் போர்க்களத்தில் ——— அம்பு தாங்கி வீழ்ந்து கிடந்தான்.

அ) முதுகில் ☐ ஆ) மார்பில் ☐
இ) கழுத்தில் ☐ ஈ) வயிற்றில் ☐

29. தனிநாயகம் அடிகளாரால் 'தமிழர் பண்பாட்டுக்கழகம்' தோற்றுவிக்கப்பட்ட ஆண்டு

அ) 1952 ☐ ஆ) 1983 ☐
இ) 1956 ☐ ஈ) 1974 ☐

30. சத்திமுற்றப்புலவர் பாண்டிய மன்னனைக் காணச் சென்ற நகர்

அ) காஞ்சி ☐ ஆ) மதுரை ☐
இ) தகடூர் ☐ ஈ) தஞ்சை ☐

புள்ளிகள் 30

## 2) பந்தியை வாசித்து, வினாக்களுக்கு முழுவிடை தருக.

பண்டைத் தமிழகத்திலே மானமும் வீரமும் உயிரைவிட உயர்ந்தவையாகக் கருதப்பட்டன. அதிலும் மக்கள் நாட்டுக்காகச் சாவதைப் பெரும்பேறாகக் கருதினர். பெண்களும் அத்தகைய மறவுணர்வு உள்ளவர்களாகவே இருந்தனர். ஒரு மறக்குடியிலே வண்டார்குழலி என்றொரு பெண் இருந்தாள். அவள் கணவன் வில்லவன்கோதை மாற்றார் படையெடுத்து வருவது கேட்டுச் சினந்தெழுந்து போருக்குப் புறப்பட்டான். அந்தப் பெண்ணுக்கு ஒரேயொரு மகன். அவன் தந்தையே! நானும் போருக்கு வருகிறேன் என்று புறப்பட்டான். தாய் "என்மகனே! நாட்டைக் காக்க நீயும் போருக்குப் போகத்தான் வேண்டும். அதற்கு பெரியவனானதும் போருக்குப் போகலாம். வா! உன் தந்தை வென்று வருவார்" என்று மகனை அணைத்து மகிழ்ந்தாள். போர்க்களத்திலே தன் வாள்வீச்சின் திறத்தால் மாற்றார் படைகளைக் கண்டதுண்டமாக்கி வெற்றிக்கொடியை நாட்டினான் வில்லவன்கோதை. இருந்தும் போர்க்களத்தில் மார்பில் வேல் தாங்கி இறந்தான். தோற்றோடிய பகைவர் மீண்டும் நாட்டைத் தாக்க வருவதைச் செவியுற்ற வண்டார்குழலி மகனை அழைத்தாள். "மகனே! நேற்று உன் தந்தை நாட்டிற்காய் வீரமரணம் அடைந்துவிட்டார். நீ போருக்குப் போய், தமிழினத்தின் வீரத்தை மாற்றாருக்குக் காட்டு" என்று மகனின் கையில் வாளைக் கொடுத்து, போய் வா மகனே! பகைவரை வென்று வா மகனே! என உச்சிமோந்து போருக்கு அனுப்பிவைத்தாள்.

1. "தமிழினத்தின் வீரத்தை மாற்றாருக்குக் காட்டு" எனக் கூறியவர் யார்?

_______________________________________________

_______________________________________________

2. வில்லவன் கோதை போர்க்களத்தில் எவ்வாறு இறந்தான்?

_______________________________________________

3. பண்டைத்தமிழகத்திலே உயிரைவிட உயர்ந்தவையாகக் கருதப்பட்டவை எவை?

_______________________________________________

4. வண்டார்குழலி எதனை மகனின் கையில் கொடுத்துப் போருக்கு அனுப்பினாள்?

_______________________________________________

5. மக்கள் எதனைப் பெரும்பேறாகக் கருதினர்?

_______________________________________________

புள்ளிகள் 10

**3) பாடநூல் வினாக்கள் ஏழினுள் ஐந்திற்கு மட்டும் விடை தருக.**

1. போர்த்துக்கேயர் தமிழ்மண்ணில் காலூன்ற எடுத்த முயற்சிகளை முறியடித்த தமிழ் மன்னன் யார்?

___

2. 1980 ஆம் ஆண்டு யாழ்ப்பாணப்பல்கலைக்கழகம் எவ்விடத்தில் அகழ்வாய்வுகளை மேற்கொண்டது?

___

3. விசயன் இலங்கைக்கு வருமுன்னரே அங்கு வாழ்ந்த ஆதிக்குடிகள் யாவர்?

___

___

4. ஆனைவிழுந்தான் என்ற இடத்தில் கண்டெடுக்கப்பட்ட சிற்பங்கள் எச்சிற்பங்களை ஒத்தவை எனக் கூறப்படுகிறது.

___

___

5. சக்திமுற்றப்புலவர் வறுமை கரணியமாக யாரிடம் பரிசுபெற வந்தார்?

___

___

6. தாயின் தாலாட்டு என்ற பாடலில் வீரமகன் எதை மீட்கும் போரில் வீரச்சாவடைந்தான்.

___

___

7. விடிவெள்ளி தோன்றும் திக்கு எது?

___

புள்ளிகள் 10

4) **தரப்பட்டுள்ள சொற்களைப் பொருத்தமாக எழுதி, கவிதையை முழுமையாக்குக.**

## தமிழ்மொழி

| | | | | |
|---|---|---|---|---|
| தேனினும் | வாழும் | கண்ட | பொதிகையில் | இனிய |

என்னைத் தாலாட்டிய மொழி
எனதருமைத் தாய்மொழி
என் ________________ தமிழ்மொழி
எண்ணமெல்லாம் நிறைந்த மொழி

தென் ________________ பிறந்த மொழி
தென்பாண்டி வளர்த்த மொழி
________________ இனிய மொழி
தெவிட்டாத செந்தமிழ் மொழி

அமிழ்தினும் இனிய மொழி
ஆண்டாண்டுகளாய் ________________ மொழி
தாய் தந்தையை காட்டிய மொழி
தத்துவம் பல ________________ தனிமொழி

புள்ளிகள் 10

## 5) இலக்கண / மொழியியல் வினாக்கள் அனைத்திற்கும் விடை தருக.

1. பின்வரும் வேற்றுமை உருபுகள் இடம்பெறுமாறு சொல்லியங்கள் எழுதுக.

   2 ஆம் வேற்றுமை ______________________

   6 ஆம் வேற்றுமை ______________________

2. சொல்லியங்களிலுள்ள பெயர், வினை, உரிச்சொற்களை எழுதுக.

   1. தேர்வில் சித்தியடைந்த சங்கவி கழி பேருவகை அடைந்தாள்.
   2. உண்மை நண்பர்கள் உறு துணையாய் இருப்பர்.

| பெயர் | வினை | உரி |
|---|---|---|
| | | |
| | | |

3. பின்வருவனவற்றுக்கு ஒவ்வொரு சொல்லியம் எழுதுக.

   நோய்நொடி ______________________

   அரைகுறை ______________________

4. பின்வருவனவற்றின் வினையடிகளைத் தருக.

   கேட்டான் ______________

   நீந்தின ______________

   நின்றனர் ______________

5. தரப்பட்டுள்ள சொற்களைப் பிரித்து எழுதுக.

   பாற்சோறு ______________

   வானவில் ______________

   பனையோலை ______________

புள்ளிகள் 15

6) **மிகப் பொருத்தமான சொல்லைக் கீறிட்ட இடத்தில் எழுதுக.**

1. நல்லவராய் ______________ நன்றென்று எண்ணுவோம்.
   ( வாழ்வதே, வாள்வதே )

2. தனிநாயகம் அடிகளார் தமிழ்மறைவிருந்து என்னும் நூலை ______________ .
   ( வெலியிட்டார், வெளியிட்டார் )

3. பண்டாரவன்னியனது போர் ______________ எண்ணி ஆங்கிலேயப்படை திகைத்தது.
   ( வழிமையை, வலிமையை )

4. முடியரசர் ______________ செலுத்த உலகை ஆள்பவர் உழவர்.
   ( செங்கோல், செங்கோள் )

5. பச்சைக்கிளி தன் ______________ பழத்தைக் கொத்தித் தின்றது.
   ( அலகினால், அளகினால் )

புள்ளிகள் 05

**7) தரப்பட்டுள்ள தலைப்புகளில் ஒன்றைத் தெரிவுசெய்து 150 சொற்களுக்குக் குறையாமல் கட்டுரை எழுதுக.**

- ✱ சாகா வாழ்வு பெற்ற சங்கிலிமன்னன்
- ✱ புலவரும் வறுமையும்
- ✱ உம்மால் மறக்க முடியாத நிகழ்வு

புள்ளிகள் 20